**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.79/2020**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரவள்ளி | Caste | : |
| Father Name/ Husband Name | : செல்வலிங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(26.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் விஸ்வநத்தம் சிவகாசியில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் பணி செய்து வருகிறேன். கடந்த 09.03.2018 அன்று நானும் எனது கணவர் செல்வலிங்கமும் ஒரு இருசக்கர வாகனத்திலும், எனது அத்தை தங்கமும், மாமனார் பெரியபாண்டியும் மற்றொரு இருசக்கர வாகனத்திலும் திருமங்கலம் அருகே உள்ள அரசபட்டியில் உள்ள எங்கள் ஊர் குலதெய்வ கோவிலுக்கு வந்து சாமிகும்பிட்டு விட்டு மீண்டும் சிவகாசிக்கு செல்லும்போது கள்ளிக்குடியை தாண்டி காலை 11.30 மணியளவில் சாய்ராம் ஓட்டல் அருகே நாய் குறுக்கே வந்ததால் எனது மாமனார் திடீரென பிரேக் போட்டதில் எனது மாமியாரின் சேலை முந்தி இருசக்கர வாகனத்தில் சிக்கி எனது மாமியார் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது. எனது மாமியாருக்கு தலையிலும் காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. விருதுநகரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு எனது மாமியாரை கொண்டு சென்றோம். அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக மேல் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 2 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது மாமியார் இறந்துவிட்டார். ஆஜர் எதிரி

எனது மாமனார் ஆவார். அவர் தான் சம்பவ தினத்தன்று விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை.